கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம்
நான்காம் வருட முதலாம் அரையாண்டு
சிறப்புக் கலைமாணித்தேர்வு 2011/2012

**SOCS – 4104** ஊடகம், தொடர்பாடலின் சமூகவியல்
**(Sociology of Mass Media and Mass Communication)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி 1 இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி 11 இல் இருந்து ஒரு வினாவிற்கும் மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

பகுதி 1

1) அ) 'வெகுசனத் தொடர்பாடல்' (Mass Communication) என்னும் எண்ணக்கருவைச் சமூகவியல் ரீதியில் வரையறுக்குக.
10 புள்ளிகள்

ஆ) வெகுசனத்தொடர்பாடலுக்கும், பண்பாட்டிற்குமான உள்ளாந்த தொடர்புகளை உதாரணங்களோடு விபரிக்குக.
15 புள்ளிகள்

2) அ) எழுத்தின் கண்டறிதலும், புத்தகப் பண்பாடும் மானுட சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களைச் சுருக்கமாக விபரிக்குக.
10 புள்ளிகள்

ஆ) 'ஊடக எழுத்தறிவு' (Media Literacy) என்பது யாது? ஊடக எழுத்தறிவின் மூலகங்களைக் குறிப்பிட்டு அவற்றின் முக்கியத்துவத்தினையும் எடுத்துரைக்குக.
15 புள்ளிகள்

3) அ) இலங்கைத் தமிழ்ப் புதினப் பத்திரிகைகளின் தகவல் அளிக்கை முறைமை பற்றிச் சுருக்கமாக விளக்குக.
10 புள்ளிகள்

ஆ) சஞ்சிகைகளின் வகைப்பாடுகளை உதாரணங்களோடு பகுத்துக்காட்டி அவை எவ்வகையில் வாசகர்களின் சிந்தனைப்புலத்தை அகலிக்க உதவுகின்றன என்பதனையும் தெளிவுபடுத்துக.
15 புள்ளிகள்

4) அ) இருபதாம் நூற்றாண்டில் வானொலி ஒலிபரப்பு எவ்வாறு பிரபலம் பெற்றது என்பதனை எடுத்துரைக்குக.

10 புள்ளிகள்

ஆ) தொலைக்காட்சி என்னும் காட்சிப்புல ஊடகத்தின் விசேட பண்புகளைக் கூறி இலங்கையில் 'ரூபவாஹினியின்' வளர்ச்சி நிலையை விபரிக்குக.

15 புள்ளிகள்

## பகுதி II

5) "வெகுசன ஊடகங்கள் தொடர்பிலான சமூகவியற் கோட்பாடுகள், அவற்றின் இருப்பையும், இயல்பையும் நாம் ஆழமாக உய்த்துணர உதவுகின்றன" அக்கோட்பாடுகளின் கருத்தியல் அனுமானம் என்பவற்றின் அடிப்படையில் விரிவாகத் துலக்கிக் காட்டுக.

25 புள்ளிகள்

6) தற்காலத் தமிழத் திரைப்படங்களில் முனைப்பாக வெளிப்பட்டு நிற்கும் பண்புகளை எடுத்துரைத்து அண்மையில் வெளிவந்து விமர்சனங்களை ஏற்படுத்திய திரைப்படங்கள் பற்றிய சமூகவியற் பாங்கான திறனாய்வினை உமது பார்வையில் வரைக.

25 புள்ளிகள்